அரசாங்க நிருவாக சுற்றறிக்கை : 25/2021

எனது இலக்கம் : EST-1/MISCL/06/0032(I)
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2021.12.20

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் தலைவர்கள்

## 2022 ஆம் ஆண்டின் கடமைச் செயற்பாடுகளை ஆரம்பித்தல்

கொவிட் 19 உலக தொற்றுநோய் நிலைமைகளுக்கு மத்தியில் அதற்கு வெற்றிகரமாக முகம் கொடுத்து, 2021 ஆம் ஆண்டில் அனைத்து தகுதியான மக்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டு, தற்போது நோயெதிர்ப்பு சக்தியைத் தூண்டும் (Booster) தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வரும் சூழலில் நாடு வேகமாக இயல்புநிலையை அடைந்து வருகிறது. தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் காலநிலை மாற்றத்திற்கான பேணதகு தீர்வுகளுடன் பசுமையான இலங்கையை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்டு, சேதன விவசாயம் மற்றும் மீள்பிறப்பிக்கத்தக்க சக்திவள உற்பத்தியை மேம்படுத்துவதற்கு நிலம், நீர் மற்றும் சூரிய ஒளியினால் வளம்பெற்ற இயற்கை வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. பொது நிதி முகாமைத்துவத்தில் பொது வளங்கள் மற்றும் பொது நிதியை பயனுறுதிவாய்ந்த வகையில் பயன்படுத்துவது தொடர்பில் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அதிகம் வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், அதன் படி முடிந்தவரை செயற்பாடுகளை பரவலாக்கி குறைந்த செலவில் சேவை வழங்கலை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த அம்சங்களை ஒருங்கிணைத்து, தேசிய உற்பத்திப் பொருளாதாரத்தை வலுப்படுத்த, மனைப் பொருளாதாரம் முதல் உயர் வரத்தகத் துறை வரை விரிவடைந்துள்ள வர்த்தகச் சமூகத்திற்கு உகந்த சூழலை உருவாக்குவது அரச சேவையின் பொறுப்பாகும்.

02. மலரும் 2022 ஆம் ஆண்டில் சமூக, பொருளாதார எதிர்பார்ப்புகளை அடைந்துகொள்ளும் ஒருமித்த எண்ணத்துடன் அனைத்து அரச ஊழியர்களும் அரச வளங்களை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்து நிகழ்கால மற்றும் எதிர்காலப் பரம்பரையினரின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதன் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது. மேலும், 2020 - 2021 ஆண்டுகளில் கொவிட்-19 தொற்றுநோயால் பின்னடைவுக்கு உள்ளான சமூக-பொருளாதார முன்னேற்றத்தை, 2022 இல் மீண்டும் ஏற்படுத்தி பலமான நாட்டை கட்டியெழுப்புவது அரச ஊழியர்களின் பொறுப்பாகும். அதன் படி, 2022 ஆம் ஆண்டில் கடமைகளை ஆரம்பிக்கும் முதலாம் நாளாகிய சனவரி மாதம் 03 ஆம் திகதி திங்கட் கிழமை அனைத்து அரச ஊழியர்களினதும் பங்கேற்புடன் தமது சேவை நிலையத்தில் இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இத்தால் ஆலோசனை வழங்குகின்றேன்.

03. அதன் பிரதான உத்தியோகபூர்வ நிகழ்வு அன்றைய தினம் மு.ப. 9.00 மணிக்கு சனாதிபதி செயலக வளாகத்தில் நடைபெறும். அதனுடன் இணைந்த வகையில் அன்றைய தினத்தில் அதே

நேரத்தில் பின்வரும் நிகழ்ச்சியை தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் அலுவலகங்களிலும் கொவிட் - 19 வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களுக்கு இணங்க நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக கீழே காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டத்தைப் பயன்படுத்த முடியும்.

I. சுகாதார வழிகாட்டல்களுக்கு இணங்க அனைத்து ஊழியர்களினதும் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் பொருத்தமான மாற்று வேலைத் திட்டங்களின் ஊடாக தேசிய கொடியை ஏற்றிய பின்னர் தேசிய கீதம் இசைத்தல்.

II. இராணுவ வீரர்கள் உள்ளிட்ட தேசத்திற்காக உயிர்த் தியாகம் செய்த அனைவரையும் நினைவுகூர்வதற்காக 02 நிமிடங்கள் அமைதி பேணுதல்.

III. அனைத்து ஊழியர்களும் தமக்கு வசதியான ஒரு மொழியில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அரச சேவை உறுதிமொழியை/ சத்தியப் பிரமாணத்தை உரத்து வாசித்தல்.

IV. தற்போது நாடு எதிர்நோக்கியிருக்கும் பிரதான சுகாதாரப் பிரச்சினையான கொவிட் - 19 வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக ஒவ்வொருவருக்கும், சமூகத்திற்கும் அலுவலக சூழலிலும் உள்ள பொறுப்புக்களை வலியுறுத்தும் சிறிய உரையொன்றை சுகாதாரத் துறைசார் உத்தியோகத்தர் ஒருவரின் பங்களிப்புடன் நடாத்துதல்.

V. சுபீட்சமான இலங்கையினுள் பயனுள்ள பிரசைகளை, மகிழ்ச்சியான குடும்பங்களை, பண்பாடான, ஒழுக்கமுள்ள நீதியான சமுதாயத்தையும் மற்றும் நீலப் பசுமை தேசத்தையும் (Blue/Green Country) உருவாக்குவதற்காக நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு என்ற அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தின் முக்கிய முன்னுரிமைகள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அரச சேவையின் பங்களிப்பை அர்ப்பணிப்புடன் வழங்குவதன் தேவையைத் தொனிப் பொருளாகக் கொண்ட, அரச ஊழியர்களை ஊக்குவிக்கும் வகையில் சுருக்க உரையொன்றை நிகழ்த்துதல்.

04. இந்நிகழ்ச்சியை சிறப்பாக நடாத்துவதற்காக முன்னின்று நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

பிரதிகள் - கௌரவ மாகாண ஆளுநர்கள்

## அரச சேவை உறுதியுரை / சத்தியப் பிரமாணம்

இரண்டாயிரத்து இருபத்தியிரண்டாம் ஆண்டின் கடமைச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் முதலாம் நாளாகிய இன்று, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, இலங்கை வாழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் புது வருடமொன்றின் ஆரம்பத்தைக் கொண்டாடுகின்றது.

இன்றுடன் ஆரம்பிக்கும் புது வருடத்தில்
ஒரே நாட்டில், ஒரே தேசத்தில், ஒரே கொடியின் கீழ்
ஐக்கியமாகவும் ஒருமித்த மனதுடனும்
பாதுகாப்பான எமது தாய்நாட்டினுள்
நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கை முன்னிறுத்திய
ஒழுக்கமான, சட்டத்தை மதிக்கின்ற, பண்பாடுகளைக் கொண்ட, ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதற்காகவும்
நிலைபேறான சுற்றாடல் முகாமைத்துவத்திற்கு முன்னுரிமை வழங்கும்
பௌதிக வள அபிவிருத்தியின் ஊடாக
மக்கள் மைய பொருளாதாரமொன்றை உருவாக்குவதற்கும்
நவீன தொழில்நுட்பத்தின் மூலம் வளம்பெற்ற மனித வளங்களை வழிநடாத்தும்
தூய அரச நிர்வாகத்தின் ஒரு பங்காளரான நான்,
மக்களின் பணத்தில் சம்பளம் பெறும் ஓர் அரச ஊழியர் என்ற வகையில்
அரச கொள்கைகளையும் குறிக்கோள்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு
என்னிடம் ஒப்படைக்கப்படும் பணிகளை

வினைத்திறனுடன்,
பயனுறுதி வாய்ந்தாக,
உறுதியான எண்ணத்துடன்,
உச்ச அளவு அர்ப்பணிப்புடன்,
நேர்மையாக,
மக்களுக்குச் சார்பாக,

நிறைவேற்றுவதாக உறுதியளிக்கிறேன்/ சத்தியப் பிரமாணம் செய்கின்றேன்.